REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மாசி 9உ திங்கள் (21—2—55) ★ ★ வெளியீடு: மாசி 10உ செவ்வாய் (22—2—55) [இதழ் 214

ஏப்ரலில் புதுவையில் தேர்தல்

மீனம்பாக்கம், பிப். 20—

இந்திய சர்க்காரின் தலைமைத் தேர்தல் அதிகாரி சுகுமார் சென் புதுவைக்குச் சென்றிருக்கிறார். புதுச்சேரி மாநில சட்ட சபைக்கும், நகரசபைகளுக்கும் இந்த ஆண்டு ஏப்ரல் இறுதிக்குள் தேர்தல் நடைபெறலாம் என்று அவர் நிருபர்களிடையே கூறினர். புதுவை அதிகாரிகளுடன் தேர்தல் பிரச்சினைகள் பற்றி கலந்து பேசவே தான் புதுவைக்குச் செல்வதாக அவர் குறிப்பிட்டார். இந்தியாவில் அமுலில் இருக்கிற தேர்தல் முறைகளே புதுவையில் அமுல் செய்யப்படும் என்று அவர் குறிப்பிட்டார். மாநில சட்ட சபைக்கு நடைபெற்ற தேர்தல்கள் பற்றி விசாரணை செய்ய தான் மதுரைக்குச் செல்வதாக அவர் குறிப்பிட்டார்.

போலீஸ் படை மீது அம்பு-குத்தீட்டி வீச்சு

'திராவிடம் விடுதலை பெற்ருலன்றி வாழ்வில்லை'

'இம்முடிவைப் பொய்யாக்கிவிட எவராலும் முடியவில்லை'

'அடக்கிவிட முயன்றவர் ஒவ்வொருவராய்ச் சாய்ந்தனர்'

கோவை சிறப்புக் கூட்டத்தில் சம்பத் ஆய்வுரை

" நாம் திட்டவட்டமாக, தெளிவாக, 'திராவிடம் விடுதலை பெற்ருலன்றி வாழ்வில்லை,' என்ற முடிவை மேற்கொண்டுள்ளவர்களாவர்; நமது இந்த முடிவை பொய்யாக்கிவிட இன்று எவராலும் முடியவில்லை;

" நமது இந்த முடிவுக்கு மக்களின் ஆதரவு பெருகி வருவது கண்டு, ஆட்சிபீடத்திலிருந்தவர்கள் அவ்வப்போது நமது முயற்சிகளை எதிர்த்து முறியடித்துவிட முயன்றனர்;

" நேருவின் படத்தைக் காட்டி, அமைச்சர் பதவியைக் காட்டி, அந்த அமைச்சர் பதவிக்குள்ள அதிகார வரம்பைக் காட்டி, இன்னும் போலீஸ் அணிவகுப்பையும்—இராணுவத்தையும் காட்டி, சட்டங்களையும்—கோர்ட்டுகளையும்—சிறைச்சாலைகளையும் காட்டி, நமது முடிவினை எதிர்த்தவர்கள் உண்டு; ஆனல், நம்மை எதிர்ப்பது எதுவானலென்ன ? 'நீதி நம் பக்கம் இருக்கிறது' என்ற நம்பிக்கையால், நாம் தொடர்ந்து நமது முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறேம்;

' நம்மை அடக்கிவிட முயன்றவர்கள் ஒவ்வொருவராய்ச் சாய்ந்துகொண்டிருப்பதையும் நாம் காண்கிறேம்;

" நாம், அத்தனை பேர்களையும் எதிர்த்து நிற்கிறேம் என்பதற்கு நமது ஆற்றல் மட்டுமல்ல காரணம்—நமது கொள்கையில், இலட்சியத்தில் ததும்பிக்கொண்டிருக்கும் நீதியும் நேர்மையும்தான்;

" நம்மை எதிர்த்த உருவங்கள் ஏராளம். என்றாலும், அவையும் இறுதிவரை நம்மை எதிர்த்து நின்று நிலைபெற்று வெற்றி பெற்றிருப்பதைக் காணவில்லை நாம் ;

" ஓமந்தூரார், குமாரசாமி ராஜா, ஆச்சாரியார் போன்றவர்களின் முடிவுகள் இதற்குச் சான்று. என்று, இவர்கள் ஒவ்வொருவரும் நம்மை எதிர்க்க முன்வந்தபோதெல்லாம், நம்மை அழித்துவிட முடியாதது மட்டுமல்ல, அவர்களே நிலைகுலைந்து விட்டார்கள் என்பதும், நமது கிளைகள் கிளைத்துக்கொண்டேயிருந்தனவென்பதும் நாடறிந்த உண்மையாகும்; இப்போது காமராசர்கூட நம் கவனத்தைக் கவருகிற எந்த விஷயத்தையும், கைவைக்காமலேயே காலந்தள்ள நினைக்கிருர்; ஆனல், நமது இலட்சியம் வெற்றிப் பாதையை நோக்கி நடை போட்டுக்கொண்டிருக்கிறது."

—இவ்வாறு கோவை மாவட்ட தி. மு. கழகத்தின் சார்பில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் தோழர் ஈ.வெ.கி.சம்பத் குறிப்பிட்டார்.

கோவை, பிப். 20—

19—2—55ல், கோவை நகர தி. மு. கழகச் சார்பில் நேற்று மாலை 7 மணியளவில் வைசியாள் வீதி குமரன் மாவு மில் கட்டிடத்தில் ஓர் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. நுழைவுக் கட்டணமாக அணு நான்கு செலுத்தி பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

கூட்டத்திற்குத் தலைமை தாங்கித்தருமாறு தோழர் அ. பொன்னம்பலனர் அவர்களை தோழர்கள் அ. பழனிச்சாமி முன்மொழிந்தும், தோழர் கிருஷ்ணமூர்த்தி

(4-ம் பக்கம் பார்க்க)

'தினத்தந்தி'யின் பொய்ச் செய்தி !

" 19—2—55 'தினத் தந்தி' இதழில், பட்டுக்கோட்டைக்கு காமராசர் வந்திருந்த போது, பொதுக்கூட்டத்தில் அவருக்கு தி. மு. கழகம் வரவேற்புப் பத்திரம் படித்துக் கொடுத்ததாக வெளியாகியுள்ள செய்தி பொய்; திராவிடக் கழகத்தார்தான் வரவேற்புப் பத்திரம் படித்துக் கொடுத்தார்கள்," என பட்டுக்கோட்டை தி. மு. கழகச் செயலாளர் க. ரெங்கசாமி அறிவிக்கிருர்.

தொழில் அப்பீல் கோர்ட் கலைக்கப்படும்?

புதுடில்லி, பிப். 20—

தொழில் அப்பீல் கோர்ட்டைக் கலைத்துவிட்டு அதற்குப் பதிலாக ஒவ்வொரு மாநிலத்திலும், தொழிலாளர் தகராறுகளில் தீர்ப்பு கூற 'தொழில் பெஞ்சு'களை ஏற்படுத்தும் வகையில், தொழிலாளர் நல அமைச்சர் கந்துபாய் தேசாய் கூறும் யோசனைபற்றி இந்திய சர்க்கார் ஆலோசனை செய்து வருவதாகத் தெரியவருகிறது.

தொழிலாளர்மேல் தடியடி—துப்பாக்கிப் பிரயோகம்

ஒரு தொழிலாளி கொலை—எட்டு போலீசாருக்குக் காயம்

போலீஸ் படையை 800 தொழிலாளர்கள் வளைத்துக்கொண்டனர்

ஜல்பைகுரி, பிப். 19—

இம்மாவட்டத்தில் உள்ள மோரகாட் தேயிலைத் தோட்டத்தில் போலீஸ் படையினருக்கும்—தோட்டத் தொழிலாளர்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டது. அதன் விளைவாக ஒரு தொழிலாளி கொல்லப்பட்டார்; போலீஸ் சார்பில் எட்டு பேர் காயமுற்றனர் எனத் தெரிய வருகிறது.

போலீஸ் படையினர் தொழிலாளர்மீது துவக்கத்தில் தடியடிப் பிரயோகமும், கண்ணீர்ப் புகை குண்டும், பின்னர் துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர் எனவும், அதற்கு எதிராகத் தோட்டத் தொழிலாளர்கள் அம்புகளையும், குத்து ஈட்டிகளையும் போலீஸ் படையினர்மீது வீசி எறிந்ததாகவும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

தோட்டத் தொழிலாளர், காண்டாண்மைக்காரர் ஒருவரைப் படுகாயப்படுத்தினதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள தொழிலாளர்களைக் கைது செய்யப் போலீஸ் படை சென்றதாகவும், அவர்கள் அவ்வாறு செய்யவிடாமல் தடுக்கும் நோக்கத்துடன் 800 தொழிலாளர்கள் மேல் போலீஸ் படையை வளைத்துக் கொண்டதாகவும், அதன் பிறகே மேற்படி தாக்குதல் நடைபெற்றதாகவும் தெரிய வருகிறது.

இதுவரை ஐந்து தொழிலாளர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

'நமது வெற்றியின்மைக்கு இன உணர்வுக் குறைவே காரணம்!'

'அதைப் பெருக்குவதே நமது உடனடிப் பணி'

மீண்டும் தலைதூக்கும் வைதீகத்திற்கு அண்ணு எச்சரிக்கை

" வைதீகமும் பழைமையும் இன்று மீண்டும் தலைதூக்குகின்றன; அவை நம்மை அவ்வளவு சுலபத்தில் ஏய்த்துவிட முடியாது. என்ருலும் நாம் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்;

" நமது எதிர் சக்திகள் நம்மை மாய்த்துவிட முடியாது என்ருலும், அவை நம்மை மாய்க்க முயற்சிக்கு முன்பாகவே நாம், திராவிட இன ஒற்றுமை உணர்வைப் பெற்றுவிட வேண்டும்; அதற்கான வகையில் நாம் பணி புரிய வேண்டும்."

—இவ்வாறு கோவை மாவட்ட தி. மு. கழகச் சிறப்புக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் அண்ணுதுரை அவர்கள் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர், நமக்குப் பின்பு கோரிக்கை எழுப்பிய ஜனப் ஜின்னுவால் சீக்கிரம் பாகிஸ்தான்

(4-ம் பக்கம் பார்க்க)

அது, அங்கேதானு?

கல்கத்தா, பிப். 19—

அணு சக்தி மருந்து வகைகளைப் பற்றி (ரேடியோ ஐசோடோப்புகள்) ஆராய்ச்சி செய்வதற்கென ஒரு கழகம் ரூ. 50 லட்சம் செலவில் கல்கத்தாவில் வெகு விரைவிலேயே ஆரம்பிக்கப்படுமென்று கூறப்படுகிறது.

'அரசியல்வாதிகள் நாட்டைக் கெடுத்தனர்'

மந்திரி பரமேஸ்வரனின் புத்தறிவு

"இக்காலத்தில் அரசியல்வாதிகளைக் காட்டிலும் சமூக ஊழியர்களே அதிகம் தேவைப்படுகிருர்கள்; அரசியல்வாதிகள் பெரும் அளவில் நாட்டைக் கெடுத்துவிட்டனர்."

மந்திரி பரமேஸ்வரன் அவர்கள், சென்னை மாணவர் சமூக ஊழிய சங்கத்தின் சார்பில் வண்ணையம்பதியில் நடைபெற்ற ஐந்தாவது மாநாட்டில் மேற்குறிப்பிட்ட கருத்தை அறிவித்துள்ளார்.

சேவா உணர்ச்சியுடன் மாணவர்கள் கிராமத்தினரை அணுகினல்தான் வெற்றிகிட்டுமென்றும், அப்பொழுதுதான் மாணவர்களிடம் கிராம மக்களுக்குச் சிறுகச் சிறுக நம்பிக்கை பிறக்க வழியாகும் என்றும் மந்திரி குறிப்பிட்டார்.

'ஆங்கிலமிருந்த இடத்தில் தமிழ் மொழி'

'பயிற்சி மொழியாக்க பல்கலைக் கழகம் முயல வேண்டும்'

கல்லூரிகளில் ஆங்கிலமிருந்த இடத்தில் தமிழ் மொழியைப் பயிற்சி மொழியாக்க பல்கலைக் கழகம் முயல வேண்டும். இத்துறையில் தீவிரமாக சிந்தித்துச் செயலாற்றுவதற்கான காலம் வந்துவிட்டது."

இக்கருத்தை விவசாய அமைச்சர் பக்தவத்சலம், தியாகராயர் கல்லூரி நாள் விழாவில் பேசும்போது வலியுறுத்தினர்.

உயர்நிலைப் பள்ளியில் பொருட்கள் அனைத்தையும் தமிழ் மொழியில் பயிலுகிற மாணவர்கள், ஆங்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 21—2—1955 திங்கள்

புரட்சியோ புரட்சி!

வெள்ளுடைக்குப் பதில் சிகப்புடை! வரண்டு கிடந்த தலையில் வாசனைத் தைலம்! பரட்டையாகக் கிடந்த கேசம் வாரி பின்னப்பட்டு—அதைச் சிறப்பிக்க ஒரு மலர்ச்செண்டு! விரிந்த நெற்றியிலே ஒரு குங்குமத் திலகம்! கூடைக்குள் கவிழ்க்கப்பட்ட பெட்டைக் கோழிபோல் சில ஆண்டு காலம் கழித்தவள், பலரும் காண வீதி உலா வருகிருள்!

எப்படி இருக்கும் இந்தக் காட்சி?

எரி மலை வெடித்ததோ எனத் தகும் வகையில், வைதிகர் கண்கள் தீச்சுவாலையை உமிழும்!

வயோதிக ஆண்கள் வசை மாரி பொழியத் தொடங்குவர் நினைவிலும்—கனவிலும்!

கிழவிகளில் சிலர் கொக்கரிப்பர்—பலர் ஒப்பாரி வைப்பர்!

மதம் போச்சு! ஆசாரம் குட்டிச் சுவராச்சு! ஆண்—பெண் உறவு முறை அற்றுப் போச்சு!—என்பர் புரோகிதச் சிலண்டிகள்!

பெற்றோர்கள் சீறுவர்—விதவைக் கோலத்தை விட்டொழிக்கத் துணிந்த வீராங்கனையை வீட்டை விட்டு வெளியே விரட்டுவர்—'குடும்பத்தைக் கெடுக்க வந்தக் கோடரிக் காம்பை'க் கொன்று தொலைக்கவும் முயற்சிப்பர்!

கணவன் இறந்தால்-பெண்ணின் நல்லாள் கைம்மை கோலமேற்கவேண்டும்! சத்தான உணவைத் துறக்க வேண்டும்! நகைகளை அணியக் கூடாது! நல்லாடை உடுத்தக் கூடாது! பிறர் எதிரில் வரக்கூடாது! வீட்டின் மூலையில் பதுங்கிக் கிடக்க வேண்டும்!

கன்னிப் பெண்ணானுலும் சரி, பூப்படைந்த பருவ மங்கையானுலும் சரி, கணவனை இழந்த காரிகைக்கு 'தேவன்' விதித்த கட்டளை இதுதான்! இதை மீறக் கூடாது! மீறுவது பாபம்! இப்படி கொடுமைப்படுத்தச் சொல்லுகிறது, இரக்கம் அறியாத கடவுள் நூற்கள்!

இத்தகுக் கட்டை உடைத்தெறிவது, ஒரு கொடுங் கோலனை விழ்த்துவதிலும் பெரிதாகும். கொல்லவரும் வேங்கையை இரு துண்டாக்கிக் கொல்லும் வீரச் செயலிலும் பெரும் வீரச் செயலாகும்.

இப்பெரும் வீரச் செயலைச் செய்திருக்கிருர் சேலத்தைச் சேர்ந்த குலாலம்பட்டியில் ஒரு அம்மையார்.

அவர் பெயர் அங்காயி என்பதாம். அவ்வம்மையாருக்கு அகவை முப்பதுதான் ஆகிறதாம்!

பல ஆண்டுகாலம் வெள்ளாடை உடுத்தியும், மலர்காணு தலையுடனும், திலகம் காணு நெற்றியுடனும், வெளி வீதி வழியே வந்தறியா அங்காயி, வைதிகக் கட்டுகளைக் களைந்தெறிந்துவிட்டு, பொட்டிட்டுப் பூச்சூடி வீதிவழியே வந்திருக்கிருர்.

வைதிகம் ஆத்திரப்படுவதற்குப் பதில்-ஆச்சரியப்பட்டிருக்கிறது! வரட்டு ஆத்திரமும் கொண்டுதான் இருக்க வேண்டும்! தீவிரமான கால மாற்றம், அந்த அளவோடு வைதிகத்தை அடங்கச் செய்திருக்கிறது.

அங்காயி செங்குந்த மரபைச் சேர்ந்தவராம்! அவருடைய மரபு இளைஞர்கள் மாநாடு, கைம்பெண்கள் மறுமணம் செய்துகொள்வதையும் வரவேற்கும் அளவு முன்னேறி இருக்கிறது. அம்மாநாட்டின் விருப்பத்தை நிறைவேற்றி வைக்கும் சிறு முயற்சியே அங்காயியின் போர்க்கோலம்!

எல்லா சமூகத்திலுமே அங்காயிகள் ஏராளமாக உள்ளனர். அந்த அங்காயிகள் குலாலம்பட்டி அங்காயியை வழிகாட்டியாகக்கொண்டு, இழந்த தங்கள் வாழ்வைப் பெற வெளிவர வேண்டும். அன்றே நமது திராவிட சமுதாயம் முழு விடுதலை பெற்ற ஒன்ருக மிளிரும். எனவே அங்காயியைப் பாராட்டுகிறேம்—அவர் வீரச் செயலைப் போற்றுகிறேம்—வாழ்க என வாழ்த்துகிறேம். புரட்சியோ புரட்சி!—எனப் பூரிப்புடன் கொண்டாடுகிறேம்.

அந்நிய நாட்டு இராணுவங்கள்

"இலங்கை எல்லைக்குள் நுழையக்கூடாது"

மக்கள் சபையில் தீர்மானம்

பிரிட்டனுடன் இலங்கை செய்து கொண்டுள்ள பாதுகாப்பு ஒப்பந்தங்களை உடனே ரத்து செய்துவிட்டு, பிரிட்டனிலுள்ள எல்லா அன்னிய நாட்டு இராணுவங்களையும், இராணுவ நிறுவனங்களையும் வெளியேற்றுவதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு கோரிக்கொண்டு, இலங்கை மக்கள் சபையின் எதிர்க் கட்சித் தலைவர்கள் கூட்டுப் பிரரேபனை ஒன்றைக் கொண்டு வந்திருக்கின்றனர்.

அப்பிரரேபணையில் மேலும் அவர்கள், இலங்கையின் இராணுவ தளங்களை வேறெந்த அன்னிய நாடும் உபயோகிக்க அனுமதிக்கப் படக்கூடாதென்றும், அந்நிய துருப்புக் கப்பல்கள், இராணுவ விமானங்கள், துருப்புகள் முதலியவை இலங்கைக்குள் நுழையவோ, இலக்கை வழியாகச் செல்லவோ, இலங்கையின் எல்லைக்குட்பட்ட கடலில் பிரவேசிக்கவோ அனுமதிக்கக் கூடாதென்றும் கோரியுள்ளனர்.

"பையில் பணமுடனும், இதயத்தில் நல்லெண்ணத்துடனும் திரும்புக!"

இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை கூறுகிருர்!

டில்லி ஒப்பந்தப்படி, தங்கள் தாய் நாட்டிற்குப் போய்விடும்படி இந்தியரிடம் இலங்கை சர்க்கார் 'சமாதானமா'கச் சொல்லிக் கொண்டிருக்கிறது என்றும், இந்தியர்கள் தங்கள் பைகளில் பணத்துடனும், இதயத்தில் நல்லெண்ணத்துடனும் தங்கள் தாய் நாடு திரும்பி விடுவார்கள் என்று தாம் நம்புவதாகவும் இலங்கைப் பிரதமர் சர். ஜான் கொத்தலாவலை கூறியிருக்கிருர்.

ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்று ஆண்டு காலத்தில், சிறு சேமிப்பு இயக்கத்தின் மூலம் 115 கோடி ரூபாய் அதிகப்படியாகக் கிடைத்த தொகையாகும்.

போலீசார், ஆசிரியர் சம்பளம் உயர்த்தப்படும்

பீகார் நிதி அமைச்சர் அறிவிப்பு

பீகாரில் போலீஸ்காரர்கள், ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோரின் சம்பளம் உயர்த்தப்படும் என்றும், பீகார் சர்க்கார் 1955—56-ம் ஆண்டிற்கென தயாரித்திருக்கும் வரவு—செலவுத் திட்டம் இதற்கான வழிவகைகளைச் செய்கிறது என்றும் தெரிகிறது. இச்செய்தியை பீகார் சட்டசபையில் வரவு—செலவு திட்டத்தை விவாதத்திற்கு வைக்கையில் நிதி அமைச்சர் டாக்டர் அனுக்கிரக நாராயண் சின்ஹா கூறினர்.

பீகார் சர்க்கார் வரவு-செலவுத் திட்டத்தில் சுமார் ஒன்பதே முக்கால் கோடி ரூபாய் துண்டு விழுகிறது.

வருகிற ஆண்டில் சர்க்காரின் வருமானம் ரூ. 65.76 கோடி என்றும், செலவு ரூ. 75.01 கோடி என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

1955–56-ம் ஆண்டிற்கு, பீகார் சர்க்கார், ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 31 கோடி ஒதுக்கியிருக்கிறது.

கோசி நதித் திட்டத்திற்கு மூன்றரை கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது; ஆனல், இத்தொகை இரட்டிப்பாக்கப்படும் என்று நிதி அமைச்சர் கூறினர்.

நீர்த்தேக்க திட்டங்களில் பீகார் சர்க்கார் ரூ. 6.23 கோடி செலவழிக்க ஒதுக்கியிருக்கிறது.

இப்போது நடைபெறும் ஆண்டில் சர்க்காருக்கு ரூ. 19 லட்சம் துண்டுவிழுகிறதாம்.

மாநிலத்தில் கைத்தறிகள்

புள்ளி விவரம்

சென்னை மாநிலத்தில் இதுவரையிலும் சுமார் 1,25,000 கைத்தறிகள், கூட்டுறவுச் சங்கத்தில் சேர்ந்துள்ளன என்றும், இந்தத் தொகை, மாநிலமெங்கிலுமுள்ள மொத்த கைத்தறிகளின் எண்ணிக்கையில் ஏறத்தாழ கால்பாகமாகும் என்றும் கூட்டுறவுச் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிருர்.

இந்தியா முழுமையிலுமுள்ள 28 லட்சம் கைத்தறிகளில் சென்னை மாநிலத்தில் மட்டும் 5,60,000 கைத்தறிகள் இருக்கின்றனவாம். இந்தியா முழுமையிலும் கைத்தறியை நம்பி வாழ்வோரின் எண்ணிக்கை 1 கோடி 40 லட்சம் என்றும் அவ்வதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

கிராமாந்திரக் கடன் முறை

ரிசர்வ் பாங்கி விளக்கம்

புதுடில்லி, பிப். 20—

சில முதலாளிகள், வர்த்தகர்கள், கமிஷன் ஏஜெண்டுகள் உட்பட தனிப்பட்ட முதலாளிகள் கிராமாந்திரக் கடனில் 9 சத விகிதம் கொடுக்கிறபோது, சர்க்காரும், கூட்டுறவு நிறுவனங்களும் 6 சத விகிதம் மட்டும்தான் கொடுக்கிறதென்றும், வட்டிக்குப் பணம் கொடுப்பவர், பணம் தேவைப்படு

(தொடர்ச்சி 5-ம் கலம் பார்க்க)

மண் அரிப்பினல் தாமோதர் திட்டங்கள் பாதிக்கப்படும்

நிலைமை மோசம் என்று நிபுணர் அறிவிப்பு

கல்கத்தா, பிப். 18—

"இந்த நாட்டில் சுமார் 80 கோடி ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன; அவற்றில் 40 கோடி ஏக்கர் நிலங்கள் சாகுபடியில் இருக்கின்றன; 10 கோடி ஏக்கர் பாலைவனமாகவும், 10 கோடி ஏக்கர் நல்ல பயன்தரும் காடுகளாகவும் உள்ளன; 20 கோடி ஏக்கர் நிலம் பயன்தராத காடுகளாக இருக்கின்றன; இந்தக் காடுகளை திருத்தினல் அவை உலகிலேயே மிகவும் அதிகமான பயன் தரும் விவசாய நிலங்களாக மாறி, லட்சக்கணக்கானவர்களுக்கு வேலை தரும்,"

என்று, ஆங்கில நாட்டு விவசாய நிபுணரான எல்ம் ஹர்ஸ்ட் என்பவர் கூறியுள்ளார்.

"மண் அரிப்பின் காரணமாக தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டத்தின் எதிர்காலம் எதிர்பார்த்த பலனை அளிக்காது,"

என்று அவர், தாமோதர் திட்ட நிலைமை பற்றிக் குறிப்பிடுகையில் தெரிவித்தார்.

வெள்ளத்தடுப்பு, விவசாயத்திற்கு நீர், குறைந்த செலவில் மின்சாரம் ஆகிய திட்டங்கள் அனைத்தும், இப்போது பீகார் பகுதியில் தாமோதர் பகுதியின் மேல் புறத்தில் ஏற்பட்டிருக்கிற மண் அரிப்பினல் பாதிக்கப்படும் என்றும், எதிர்காலத்தில் பல திட்டங்களுக்கு மண் அரிப்பின் மூலம் தாமோதர் திட்டத்தில் பாதகம் ஏற்படும் என்றும் அந்த நிபுணர் மேலும் கூறியுள்ளார்.

"இப்பகுதியில் சுமார் 10 லட்சம் ஏக்கர் நிலம் மண் அரிப்பினல் நாசமடைகிறது," என்ருர் அவர்.

காடுகளில் ஏராளமாக மரங்களை வெட்டியதும், ஆடு, மாடுகள் அளவுக்கு மீறி மேய்ந்து புல்தரைகளை நாசப்படுத்தியதும்தான் மண் அரிப்பிற்குக் காரணம் என்றும் அவர் குறிப்பிடுகிருர்.

இந்த மண் அரிப்பால் பீகாருக்கு ஆண்டுதோறும் கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்படும் என்று அவர் கூறுகிருர்.

தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டங்களைப் பார்வையிட்டு அவர் இப்போதுதான் திரும்பியிருக்கிருர்.

மண் அரிப்பைத் தடுக்கும் ஏற்பாடுகளில் ஏராளமாக இயந்திரங்களையே நம்பிக்கொண்டிருக்கிருர்கள் என்றும், விவசாயிகளையும், காடுகளைப் பயன்படுத்துவோரையும் மறந்துவிட்டார்கள் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டிருக்கிருர்.

மண் அரிப்பைத் தடுக்க, பீகார், மேற்கு வங்கம், மத்திய சர்க்கார் ஆகியவைகள் ஒன்று சேர்ந்து திட்டம் வகுத்து காரியமாற்ற நல்ல வாய்ப்புக்கள் இருக்கின்றன என்று அவர் மேலும் கூறினர்.

இந்தியா—இங்கிலாந்து தொழிலாளிகளின் வேலை நிலை

தேவைக்கதிகமான ஆண்கள் இந்தியாவில் உள்ளனர்

"இந்தியாவில் குறைந்த கூலிக்கு ஆலைகளில் வேலை செய்ய ஆண்கள் கிடைக்கின்றனர்; இருந்தாலும், இங்கிலாந்தில் ஒரு ஆலைத் தொழிலாளி செய்யும் வேலையைக் காட்டிலும் மிகக் குறைவான அளவு வேலையையே இந்திய ஆலைத் தொழிலாளி செய்கிருன்; தேவைப்படுவதற்கு அதிகமான ஆட்கள் அங்கு வேலைக்குக் கிடைப்பதே இதற்குக் காரணமாகும்."

—இவ்வுண்மையை, பெங்களூர் ஆலை ஒன்றில் அதிகாரியாக இருந்து இங்கிலாந்து சென்றுள்ள ஒரு வெள்ளை அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது:—

'ஒரு ஆலையில் நூல் சுருளைகளை சிக்கெடுக்க இங்கிலாந்தில் 12 ஆண்தொழிலாளிகளே தேவைப்படுகின்றனர்; ஆனல் அதே அளவு வேலையை இந்திய ஆலைகளில் செய்வதற்கு 30 தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர்."

"நெசவாலை தொழிற்சங்கம் பலம் பொருந்திய ஸ்தாபனமாக இருக்கிறது."

நீர்வளிக் குண்டு பரிசோதனை

ஆஸ்திரேலியப் பகுதியில் அனுமதி கிடைக்காது

சிட்னி, பிப். 18—

"ஆஸ்திரேலிய சர்க்கார் தன் பகுதியில் இனிமேல் நீர்வளிக் குண்டுகள் பரிசோதனையை அனுமதிக்காது,"

என்று, ஆஸ்திரேலிய சப்ளை இலாகா அமைச்சர் ஹாவர்டு பீல் என்பவர் தெரிவித்திருக்கிருர்.

ஆஸ்திரேலியாவில் நீர்வளிக் குண்டு பரிசோதனைகள் நடைபெற்ருல் அதன் மூலம் நல்ல பயன் கிட்டும் என்று பிரிட்டிஷ் அணுசக்தி அதிகாரி ஒருவர் கூறியதாக இங்கே செய்தி ஒன்று வெளியாகி இருந்தது. இச்செய்தி பற்றி தன் கருத்தைத் தெரிவிக்கும்போதுதான் அமைச்சர் மேற்கண்டவாறு பதில் அளித்திருக்கிருர்.

"ஆஸ்திரேலியா பற்றிப் பேச பிரிட்டிஷ் அதிகாரிக்கு அதிகாரம் எதும் கிடையாது," என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

நீர்வளிக்குண்டு பரிசோதனையையோ, அல்லது அதனை ஒட்டி வேறு எவ்வித பரிசோதனையையோ ஆஸ்திரேலிய சர்க்கார் அனுமதிக்கும் நோக்கம் கிடையாது என தான் பலமுறை கூறியுள்ளதாக அவர் மேலும் கூறினர்.

பிரிட்டன் மறுப்பு

பிரிட்டிஷ் சர்க்கார் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், 'ஆஸ்திரேலியப் பகுதியில் நீர்வளிக் குண்டுகளைப் பரிசோதனை செய்யும் நோக்கம் தங்களுக்கு எதும் கிடையாது,' என்று கூறப்பட்டிருக்கிறது.

(3-ம் கலத்தின் தொடர்ச்சி)

வோர் போய்க் கேட்டால் உடனே கொடுத்து விடுகின்றனர் என்றும், இதனல் அவசரச் செலவுகளுக்கு வட்டிக்குப் பணம் கொடுப்பவர்களிடமே கிராமவாசிகள் அதிகமாகப் போகிருர்கள் என்றும், இவைதான் தனிப்பட்ட முறையில் வட்டிக்குப் பணம் கொடுக்கிறவர்களே கிராமாந்திரக் கடன் கொடுப்பதில் அதிகமானவர்களாயிருப்பதற்கான காரணங்கள் என்றும் இந்திய ரிசர்வ் பாங்கி தெரிவித்திருக்கிறது.

‘ஆரம்ப ஆசிரியர் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும்’

‘அத்துறையினரை கலக்காத அரசாங்கப் போக்கு ஆபத்தானது’

‘ஆதாரக் கல்வி நாட்டுக்கு ஆகாத கல்வியே’

“ஆசிரியத் தொழிலை வானளாவ உயர்த்திப் பேசிவிட்டு, அதே நேரத்தில், அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வயிறார உண்பதற்குக்கூட போதாத சம்பளத்தைத் தந்துவருவது, மன்னிக்க முடியாத பெரும் குற்றமாகும். என்றைய தினம் ஆசிரிய உலகத்துக்கு இழைக்கப்பட்டும் இந்த அநீதி அழிக்கப்படுகிறதோ, என்றைய தினம் ஆரம்ப ஆசிரியர்களின் அடிப்படைச் சம்பளம் ரூ. 75 என்று ஏற்படுகிறதோ, என்றைய தினம் அந்த ஆசிரியத் தோழர்களின் குடும்பங்களிலே குதூகலமும், உள்ளங்களிலே உற்சாகமும் நடமாடத் தொடங்குகிறதோ, என்றைய தினம் அவர்கள் கண்களிலே புது ஒளியும், முகங்களிலே புன்முறுவலும் காணப்படுகிறதோ, அன்றைய தினம்தான் நாட்டுக்கு நற்காலம் பிறக்கும் தினமாகும்.

“கல்வியின் நோக்கத்தைப் பற்றியும், அதன் அமைப்பு முறையைப் பற்றியும், அதற்கு இருக்க வேண்டிய பாட திட்டங்களைப் பற்றியும், அந்தப் பிரச்சினையில் ஈடுபட்டவர்களின் கருத்தை அறியாமலேயே அரசாங்கத்தார் அடிக்கடி தலையிடுவது இப்போதெல்லாம் சர்வசாதாரண நிகழ்ச்சிகள் ஆகிவிட்டன. ஆனால், இத்தகு நிலைமை நீடித்து நிற்பது நாட்டின் நன்மைக்கும் சரி, கல்வியின் வளர்ச்சிக்கும் சரி, சிறிதும் ஏற்றதல்ல; கல்விப் பிரச்சினைகளைப் பொறுத்த வரையில் முடிவு கூறும் அதிகாரம் ஆசிரியர்களின் பிரதிநிதிகளைக்கொண்ட கல்விச் சபைகளிடமே இருக்க வேண்டும்; 1938-ம் ஆண்டுக்கு முன்பு அப்படித்தான் இருந்தது; இப்போதும் இங்கிலாந்து போன்ற நாடுகளில் அப்படித்தான் இருக்கிறது; அப்படி இருந்தால்தான், கல்வித் துறை, அரசியல் சூதாட்டத்தில் ஆடப்படும் காயாக இல்லாமல், நிரந்தர நன்மையைத் தரும் நல்லதோர் கருவியாக விளங்க முடியும். எனவே ஒவ்வொரு மாவட்டத்திலும், அந்தந்த மாவட்டத்தில் உள்ள ஆரம்ப ஆசிரியர்கள், ஆசிரிய மானேஜர்கள், கல்வித்துறை வல்லுனர்கள் ஆகியோரைக்கொண்ட மாவட்டக் கல்விக் குழு (District Education Council) ஏற்படுத்தப்பட வேண்டும். ஆரம்பக் கல்விக்கு என்று ஒரு கல்விக் குழுவும், உயர்நிலைப் பள்ளிக்கு என்று ஒரு கல்விக் குழுவும் ஏற்படுத்தப்படலாம். இப்படி ஏற்படுத்தப்படும் கல்விக் குழுக்களின் ஒப்புதலைக் கேளாமல், அவற்றின் ஆராய்ச்சிக்கு அனுப்பாமல், எந்தப் புதிய திட்டத்தையும் கல்வி உலகில் நுழைக்கக்கூடாது, அரசாங்கம். இப்படி ஓர் ஏற்பாடு உருவாகுமானால், எவரையும் கேளாமல் ஓர் விபரீதத் திட்டத்தைக் கொண்டுவந்துவிட்டு, அதன் பிறகு மட்டற்ற எதிர்ப்புக்கு ஆளானரே மதிப்பிற்குரிய ஆச்சாரியார், அத்தகைய நிலைமை ஒருநாளும் ஏற்படாது.

“இல்லாத ஊர்களிலெல்லாம் ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்குவதும், இருக்கும் ஊர்களில் அந்தப் பள்ளிகளின் நிலைமையை உயர்த்துவதும்தான் நம்முடைய முதற்பெரும் கடமைகளாக இருக்க வேண்டுமே தவிர, ஆரம்பப் பள்ளிகளை ஆதாரப் பள்ளிகளாக மாற்றிக்கொண்டிருக்கும் காரியத்தில் நம்முடைய நேரத்தையோ, நினைப்பையோ செலவிடுவது, தேவையில்லாத காரியம் மட்டுமல்ல, தீதான திட்டமும் ஆகும். ஆளுக்கு ஒருவிதமாகவும், வேளைக்கு ஒருவகையாகவும் பேசிவருகிறார்களே தவிர, இன்னதுதான் ஆதாரக் கல்வி என்று திட்டவட்டமாகவும், தெள்ளத் தெளிவாகவும் வரையறுத்துக் கூறியவர்கள் இதுவரை யாரும் இல்லை. மாணவர்களின் படிப்புக்காகச் செலவாகும் பணத்தை மாணவர்களே தேடிக்கொள்வது—அதுவும் அந்தப் படிப்பின் மூலமாகவே தேடிக்கொள்வது தான் ஆதாரக் கல்வி என்கிறார்கள் சிலர்; படிப்புக்காக ஆகும் செலவை படிப்பின் மூலமாகவே தேடிக்கொள்வது என்பது ஒரு நாளும் நடக்காத காரியம். இதுவரையில் இந்த மாநிலத்திலும் சரி, வேறு மாநிலங்களிலும் சரி, ஆதாரப் பள்ளிகள் எத்தனையோ தொடங்கப்பட்டிருக்கின்றன; எந்த ஆதாரப் பள்ளியிலாவது அந்தப் பள்ளிக்கூடத்திற்காகும் செலவு முழுவதையும், அந்தப் பள்ளிக்கூட பிள்ளைகளே அவர்களுடைய கல்வியின் மூலமாகவே தேடித் தந்திருக்கிறார்கள் என்று யாராவது சொல்ல முடியுமா?”

12—2—55-ல் போடிநாயக்கனூரில் நடைபெற்ற பெரியகுளம் தாலுகா ஆரம்ப ஆசிரியர் மாநாட்டில் ‘ஆரம்பக் கல்வி’ ஆசிரியர் தோழர் பி. வீரராகவன் அவர்கள் ஆற்றிய தலைமை உரையில் மேற்கண்ட கருத்துக்களை வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:—

“‘ஆரம்பக் கல்வியா—அது மிக மிக அவசியமாயிற்றே!’ என்று இன்றையதினம் பேசாதவர்கள் யாரும் இல்லை; நாட்டு மக்கள் அத்தனை பேராலும் கூர்ந்து கவனிக்கப்படுகிற பெருமையும், சிறப்பும் மிகுந்த பெரியதோர் பிரச்சினையாகிவிட்டது ஆரம்பக் கல்வி, இன்றையதினம்.

“ஒரு காலம் இருந்தது—கல்வி என்ற பேச்சை எடுத்தாலே, மக்களில் மிகப் பலர் கைகொட்டிச் சிரித்த காலம். ‘படிப்பாம் படிப்பு; படித்தவனெல்லாம் என்னத்தைச் சாதித்து விட்டான்,’ என்று கேலி பேசிக் கெக்கலி கொட்டிய வேளை. பள்ளிக்கூடம் போவது பயனற்ற செயல் என்றும், ஏடுகளைப் படிப்பது ஏமாளிகளின் தொழில் என்றும் கருதப்பட்ட நேரம். அந்தக் காலமும் நேரமும் மண்ணாகி மாண்டு மடிந்துவிட்டன. ‘கல்வியின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி’ என்கிற உண்மையைத் தெள்ளத் தெளிவாக இப்போது அவர்கள் அனைவரும் அறிந்துகொண்டிருக்கிறார்கள்.

“மிக மிக மகிழ்கிறேன்—அந்த அறிவுத் தெளிவைக் கண்டு; ஆனால் மகிழ்ச்சி, மனக்கலக்கமாக மாறிவிடுகிறது மறு விநாடியிலேயே! ஆரம்பக் கல்வியின் வளர்ச்சியைப் பற்றி அத்தனைம் பேரும் ஆர்வத்தோடு பேசுகிறார்களே தவிர, அத்தகு கல்வியை ஊட்டிவரும் ஆரம்ப ஆசிரியர்களைப் பற்றி — அவர்களுடைய ஊதியம் கிடுகிடு பாதாளத்திற்குக் கீழேயும் விழுந்து கிடப்பதைப் பற்றி—அப்படி விழுந்து கிடப்பதாலே விஷம் போல ஏறிக்கிடக்கும் விலைவாசிகளைத் தாங்க முடியாமல் அவர்கள் அனவிடைப் புழுக்களென வாடி வதங்கும் பரிதாபத்தைப்பற்றி யாருமே சிந்தித்ததாகத் தெரியவில்லை.

“ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்தவேண்டியது எவ்வளவு அவசியமான காரியமோ அதே அளவு அவசியம் நிரம்பிய பணி, கிராமத்திற்கோர் பாடசாலையை ஏற்படுத்துவது. 250 பேருக்கு குறையாத மக்கள் தொகை படைத்த ஒவ்வோர் ஊரிலேயும் ஒவ்வோர் ஆரம்பப்பள்ளி இருந்தே தீரவேண்டும். அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் இந்தக் காரியம் நிறைவேறிவிட வேண்டும். இந்த அரும்பணியைத் திட்டவட்டமாகச் செய்து முடித்தால்தான், ‘பதினுன்கு வயதுக்கு உட்பட்ட எல்லா பிள்ளைகளுக்கும் கட்டாய ஆரம்ப இலவசக் கல்வியைத் தந்தாகவேண்டும்,’ என்று அரசியல் திட்டம் தெரிவிக்கிறதே, அந்த அன்புக் கட்டளையை நிறைவேற்றி வைக்க முடியும்.

பற்பல தொழில்களில் மாணவர்களை ஈடுபடுத்தி, அந்தத் தொழில்கள் மூலமாகக் கல்வியைப் புகட்டுவதுதான் ஆரம்பக் கல்வி என்று சிலர் இயம்புகிறார்கள்; இதுதான் ஆதாரக் கல்வியென்றால், இத்தகைய ஆதாரக்கல்வியை ஒழித்தே தீரவேண்டியது நம்முடைய கடமையாகும். சின்னஞ்சிறு பிள்ளைகளை கடின தொழில்களில் ஈடுபடுத்துவது ஜீவகாருண்யமற்ற செயல் என்பது அகில உலகத்தாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற உண்மையாகும். இந்தக் கருத்தை முன்வைத்துத்தான், இந்திய அரசாங்கமும், பதினுன்கு வயதுக்கு உட்பட்ட சிறுவர்களைத் தொழிற்சாலைகளில் வேலைக்கு வைத்துக்கொள்வதைத் தடை செய்து சட்டமியற்றியிருக்கிறது. சின்னஞ்சிறு பிள்ளைகளிடமிருந்து தொழிற்சாலைகளில், தொழில் என்கிற பெயரால் ஊதியம் கொடுத்து வேலை வாங்குவதே குற்றம் என்று ஏற்படுகிறபோது, அதே பிள்ளைகளிடமிருந்து, பள்ளிக்கூடங்களில், கல்வி என்கிற பெயரால், ஊதியம் கொடுக்காமல் வேலை வாங்குவது மட்டும் எப்படி நானிலம் போற்றவேண்டிய நற்பண்பாக மாறிவிட முடியும்? நான்காவது பாரத்திலும், அதற்கு மேற்பட்ட வகுப்புகளிலும் படிக்கும் பிள்ளைகளுக்குத் தொழிற் கல்வியைப் புகட்டவேண்டியது மிகவும் அவசியமான காரியம். ஆனால், ஆரம்பப் பள்ளிகளில் படிக்கும் ‘அன்றலர்ந்த செந்தாமரைகளுக்கு’ — ஏழு, எட்டு, ஒன்பது என்னும் வயது படைத்த சின்னஞ்சிறு குழந்தைகளுக்குத் தொழிற் கல்வியைப் புகட்டுவது அர்த்தமற்ற செயல் மட்டுமல்ல— ஆபத்தான காரியமும்கூட! எனவே எந்தக் கண்ணோட்டத்தின்படி பார்த்தாலும் சரி, ஆதாரக் கல்வி என்பது, அர்த்தமற்றதோர் சொல்லடுக்கு என்றே ஏற்படுகிறது.

ஆரம்பக் கல்வியைப் பற்றிய மற்றோர் பிரச்சினை—ஆரம்பப் பள்ளிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளுக்குமிடையே இருக்க வேண்டிய உறவைப்பற்றியதாகும். இன்றைய தினம் உள்ள நிலைமையில், ஆரம்பப் பள்ளிக்கூடத்தின் எட்டாவது வகுப்பை முடித்த மாணவர்கள், பெரும்பாலும், உயர்நிலைப் பள்ளியின் ஒன்பதாவது வகுப்பில் அதாவது நான்காவது பாரத்தில், சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை; ஒன்று அல்லது இரண்டு வகுப்புகள் குறைத்தே சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இதனால் படித்த வகுப்புகளிலேயே மீண்டும் ஒருமுறை படிக்கவேண்டிய தர்மசங்கடமானநிலையும் மாணவர்களுக்கு ஏற்படுகிறது. அதுபோலவே, ஒரே வகுப்புக்காக இருமுறை பணம் செலவழிக்க வேண்டிய வேதனை பெற்றோர்களுக்கு ஏற்படுகிறது. எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்த விபரீதம் மிகுந்த விசித்திர நிலைமையை இனியும் நீடிக்கவிடக்கூடாது அரசாங்கம். 6, 7, 8 வகுப்புகளுக்கும், 1, 2, 3-வது பாரங்களுக்குமிடையே எத்தகைய வேறுபாடும் இருக்கக்கூடாது. ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி என இருவகைப் பள்ளிகள்தான் நாட்டில் இருக்க வேண்டுமே தவிர, ‘மிடில் ஸ்கூல்’ என்பதாக ஓர் அமைப்பே இருக்கக்கூடாது.

நிலைமை இந்த விதமாகத் தெளிவுபடுத்தப்பட்டால், நான் மேலே குறிப்பிட்டதைப்போல, ஒரே வகுப்பில் இருமுறை படிக்க வேண்டிய சங்கடமும் அநீதியும் இனி இருக்கமாட்டா.

“பள்ளிக்கூடப் பாட திட்டத்தில் மதக் கல்விக்கு இடம் இருக்கக்கூடாது; பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களின் பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருப்பார்கள்; எந்த ஒரு மதத்தின் கொள்கைகளைப் பள்ளிக்கூடத்தில் புகுத்தினாலும் ஏனைய மதத்தவர்கள் எதிர்க்கத்தான் செய்வார்கள்; எந்த ஒரு மதத்தையும் சேராத மதக் கொள்கை என்பதாக ஒன்று இருக்கவும் முடியாது. மதக் கல்வி என்று நாம் குறிப்பிடுவது எந்த ஒரு மதத்தின் கொள்கைகளையும் அல்ல; பொதுவான ஒழுக்கக்கோட்பாடுகளைத்தான் என்று சிலர் சொல்லக்கூடும். அப்படியானால் அத்தகு ஒழுக்கக்கோட்பாடுகளை சமுதாய ஒழுக்கக் கல்வி (Moral Instruction) என்றுதான் அழைக்க வேண்டுமே தவிர, ‘மதக் கல்வி’ என்கிற மகுடம் சூட்டி, வீண் பகையையும், உட்பூசலையும் வளர்க்க வேண்டியது ஏன்? அவரவர்களுடைய மதம், அவரவர்களுடைய சொந்த விஷயம்; அது அவர்களுடைய வீட்டோடு இருக்க வேண்டியதே முறை; பல்வேறு மதத்தினர் இணைந்து நிற்கும் பள்ளிக்கூடத்திற்குள் ஏன் அது புகுதல் வேண்டும்?”

உ. பி.-யில் ஆதாரக் கல்வித் திட்டத்திற்கு எதிர்க் கல்வித் திட்டம்

அதிருப்திகரமானது என இந்தியப் பேரரசு இடித்துரை

தங்கள் திட்டமே உயர்வானது என உ.பி. அறைகூவல்

வார்தா ஆதாரக் கல்வித் திட்டத்திற்கு எதிரான ஒரு கல்வித் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்திருக்கிறது உத்திர பிரதேச அரசாங்கம். ‘அத்திட்டம் மிக மிக அதிருப்திகரமானது,’ என இந்தியப் பேரரசின் கல்வித் துறை நிபுணர்கள் இடித்துக் கூறியுள்ளனர். அத்துடன் வார்தா ஆதாரக் கல்வித் திட்டத்தை முழு அளவில் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால், உத்திர பிரதேச அரசாங்கமோ, இந்தியப் பேரரசின் இடித்துரையையும், கட்டளையையும் துச்சமாக மதிக்கிறது.

அதுவுமன்றி, வார்தா கல்வித் திட்டத்தைக் காட்டிலும் தன்னுடைய கல்வித் திட்டத்தில் ஆக்கும் சக்தி அதிகமாக உள்ளதாகவும், குழந்தைகளிடம் அதிகமான உழைப்பைத் திணிக்கக்கூடியதாக வார்தா கல்வித் திட்டம் இருப்பதுடன், இயந்திர மயமாக்கப்பட்ட தொழில் பயிற்சி கொண்டதாக இருக்கிறது என உத்திர பிரதேச அரசாங்கம், இந்தியப் பேரரசிற்குச் சுடச்சுட பதில் கொடுத்திருக்கிறது.

வாலாஜாபாத் இந்துமத பாடசாலை:
சோவியத் கலாச்சார தூதுக் குழுவினர் வருகை

சோவியத் கலாச்சாரத் தூதுக் குழுவினர், செங்கற்பட்டு மாவட்ட கலெக்டர் திரு. ஜே. எம். லோபோ. பிரபு ஐ. சி. எஸ். அவர்களுடன் 13—2—55 காலை வாலாஜாபாத் இந்துமத பாடசாலையை பார்வையிட்டனர். பாடசாலையின் முகப்பில் பாடசாலைச் செயலாளர் வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்களும், சாரணர்களும், குருளையர்களும், விரதச்சாரி அணியினரும், மற்றவர்களும் அவர்களை வரவேற்றார்கள். பாடசாலை நல்ல காற்றோட்டமுள்ளதாய், நடுவில் பரந்த வெளியிடத்தை உடையதாய் அமைக்கப்பெற்று இருப்பதைக் கண்டு அவர்கள் பெரிதும் மகிழ்ந்தார்கள். பாடசாலையையும், பாடசாலையோடு சேர்ந்த மாணவர் இல்லத்தையும் அவர்கள் வாழ்த்திச் சென்றார்கள்.

ஜமீன்தாரி ஒழிப்பு

சர்க்காரில் ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டத்தின் கீழ் வந்த எஸ்டேட்டுகள் (ஜமீன், குத்தகை, இனும் எஸ்டேட்டுகள்) மொத்தம் 4,713 என்றும், 1954-ம் ஆண்டு டிசம்பர் இறுதிவரையில் முடிவான இருவாரங்கள் வரை அறிவித்த எஸ்டேட்டுகள் மொத்தம் 4,661 என்றும், பாக்கி இருக்கும் 52 எஸ்டேட்டுகளில் ஜமீன் 1; குத்தகை 8; இனும் 43 என்றும் அறிவிக்கப்படுகிறது.

கல்கத்தா மெயிலில் - கம்யூனிஸ்டு ஆர்ப்பாட்டம்

கட்டணம் செலுத்தா பிரயாணம்-கண்ட கண்ட இடங்களில் நிறுத்தி இறங்கல் - பெட்டிகள் முழுவதிலும் தொத்தல்!

2,000 பொதுவுடைமையினர் 'மக்களாட்சி மாண்பு'!

விஜயவாடா, பிப். 19—

சிங்கராயகோண்டாவிலிருந்து சின்னகஞ்சம் வரை டிக்கேட்டுகள் இல்லாமலேயே பிரயாணம் செய்த சுமார் 2,000 கம்யூனிஸ்டுகள், தாங்கள் ஏறிவந்த கல்கத்தா மெயில் வண்டியை, தாங்கள் இறங்க நினைத்த இடத்திலெல்லாம் அபாயச் சங்கிலியைப் பிடித்திழுத்து நிறுத்தி பிரயாணிகளுக்குத் தொல்லை விளைவித்தனர். இவர்கள் செங்கொடியேந்தி, கோஷங்களை எழுப்பிக்கொண்டு, இரயல் பெட்டிகளின் மேலேயும், இரயில் எஞ்சின் டெண்டரிலும் ஏறிக்கொண்டனராம்.

இரயில்வே அதிகாரிகளும், சிப்பந்திகளும் அவர்களிடம் நயமாகக் கேட்டுக்கொண்டும் எவ்வித பலனும் ஏற்படவில்லை என்றும், மாருக, அக்கம்யூனிஸ்டுகள் தங்கள் கைகளில் வைத்திருந்த தடிகளைக் காட்டி பயமுறுத்தி, இரயில் வண்டியையே தங்கள் 'வசப்'படுத்திக் கொண்டனர் என்றும் தெரிகிறது.

ஒங்கோலில் ஆந்திர கம்யூனிஸ்டுத் தலைவர் பி. சுந்தரையா பேசிய தேர்தல் பொதுக்கூட்டம் ஒன்றிற்கும், அங்கே நடைபெற்ற ஜி. வரலட்சுமி குழுவினரின் கலைக் கண்காட்சி ஒன்றிற்கும் சென்றுவிட்டு ஊர் திரும்பி வருகையிலேயே அவர்கள் இவ்வித ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டிருக்கின்றனர்.

கூட்ஸ் வண்டிகள் உட்பட எல்லா இரயில் வண்டிகளிலுமே அவர்கள் டிக்கெட்டுகள் இல்லாமலேயே பிரயாணம் செய்தார்களாம்.

கம்யூனிஸ்டுகளின் இந்த ஆர்ப்பாட்டம் குறித்து, அந்த மெயில் வண்டியில் பிரயாணம் செய்த ஒருவர் குறிப்பிடுகையில், தாம் பிரயாணம் செய்த மேல்வகுப்புப் பெட்டியின் கதவுகளைத் திறக்க முயற்சித்து 50 பேர் உள்ளே நுழைந்தனர் என்றும், அவர்கள் சின்னகஞ்சம் வரையில் வந்தார்கள் என்றும், இரயில்வே நிலையங்களே இல்லாத இடங்களிலெல்லாமாக சுமார் 12 இடங்களில் வண்டி நிறுத்தப்பட்டது என்றும், அவர்களனைவரும் டிக்கெட்டுகள் இல்லாமலேயே பிரயாணம் செய்தனர் என்றும் கூறினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தையொட்டி கல்கத்தா மெயில் இன்று காலை 170 நிமிட நேரம் தாமதமாக வந்து சேர்ந்தது என்று அறிவிக்கப்படுகிறது.

தோழர் ஈ.வெ.கி. சம்பத் ஆய்வுரை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வழிமொழிந்தும் கேட்டுக்கொண்டனர்.

தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் தலைமை ஏற்று, கூட்டத்தின் நோக்கத்தை விளக்கிவிட்டு, தி. மு. கழகக் கொள்கைகள் குறித்து சிறிது நேரம் பேசினார்.

அடுத்து தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் சிறு சொற்பொழிவு நிகழ்த்தியதும், தோழர் ஈ. வெ.கி. சம்பத் அவர்கள் அரியதோர் உரையாற்றினார்

இறுதியாக பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் பெருத்த ஆரவாரப் பேரொலிக்கிடையே எழுந்து சீரியதோர் கருத்துரை வழங்கினார்.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

முன்னர், பொதுச் செயலாளர் அவர்கட்கும், இதர தோழர்கட்கும் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தொடர்ந்து பேசியதாவது:—

"தி. மு. கழகம் இன்று நாட்டு மக்களின் நம்பிக்கைக்கு உரிய கழகமாக வளர்ந்திருக்கிறது. நாட்டு மக்களின் நம்பிக்கைக்கும், பேராதரவிற்கும் பாத்திரமாகியிருக்கும் நமக்கு பொறுப்புகளும் அதிகமாகியிருக்கின்றன.

"இன்று உலக அரசியலில் குழப்பம் மிகுந்திருக்கிறது என்பது மட்டுமின்றி, இந்த நாட்டு தலைவர்கள் பலர் தந்த வாக்குறுதிகளையும், சொன்ன சொற்களையும் மறந்து நிலைகுலைந்து, தடம்புரண்டு சென்றுகொண்டிருப்பதையும் நாம் காண்கிறோம்.

"ஆனால், நாம் மட்டும்தான் தடம்புரளாமல், இடம் மாருமல், இலட்சியப் பாதையில் வேகமாக நடந்து கொண்டிருக்கிறோம்.

"இந்த நாட்டு மக்களின் சீரிய வாழ்வுக்கான தத்துவம் எதுவாயிருக்க முடியும் என்பது குறித்து சிந்தித்தோம்; ஆராய்ந்தோம்; அப்படிச் சிந்தித்துச் சிந்தித்து ஆராய்ந்து ஒரு முடிவை மேற்கொண்டோம்; அந்த முடிவுதான் சரியானது; அந்த முடிவில்தான் இந்த நாட்டு மக்களின்—திராவிடர்களின் நல்வாழ்வு அடங்கியிருக்கிறது என்பதை நாம் திடமாக நம்புகிறோம்.

"இன்று நாம் எதைச் சொல்லி வருகிறோமோ அந்த இலட்சியம் நியாயமானதுதான் என்று பலரும் ஒப்புக்கொள்ளத்தக்க வகையில் நிலைகள் உருவாகி வருவதையும் நாம் காண்கிறோம்.

"கடந்த மூன்றாண்டு காலமாக நாம், 'ஐந்தாண்டுத் திட்டம்' என்ற பெயரால் பெரும் பெரும் திட்டங்கள் எல்லாம் வடநாடு வளமாவதற்கே நிறுவப்படுகின்றன: தென்னாடு வெகு பகிரங்கமாகச் சுரண்டப்படுகிறது; ஏமாற்றப்படுகிறது; வஞ்சிக்கப்படுகிறது,' என்று சொல்லி வந்திருக்கிறோம்

"ஆனால், 'வடநாடாவது தென்னாடாவது? வடநாடு—தென்னாடு என்று பிரித்து பேதம் கற்பிப்பது ஆகாது—கூடாது,' என்று கூறி வந்த நிதியமைச்சர் சுப்பிரமணியம், கோவைக்கடுத்த பெரியநாயக்கன்பாளையத்தில் நடைபெற்ற ஐந்தாண்டுத் திட்ட விவாதக் கூட்டமொன்றில், வயிறெரிந்து, 'வடநாட்டிலேயே திட்டங்கள் பெரும் தொழிற்சாலைகளுக்காக அமைகின்றன; இந்த நிலை நீடித்தால் தமிழ் நாட்டில் ஆபத்தான கொந்தளிப்பு ஏற்படும்,' என்று எதிர்காலத்தைச் சுட்டிக் காட்டிப் பேசியிருக்கிறார்.

"அவர், தன்னை எதிர்காலத்தில் மக்கள் சூழ்ந்துகொண்டு, 'என்ன செய்தாய் நீ?' என்று எங்கே கேட்பார்களோவென அஞ்சி, இப்போது, 'நான் அப்போதே இதைச் சொல்லியிருக்கிறேன்,' என்று, 'ரிக்கார்ட்' செய்து கொள்வதற்காகக் கூறியிருக்கிறார் எனக் கொள்ளலாம்."

ஓராசிரியர் பள்ளித் திட்டம்

சென்னை சர்க்கார் அறிவிப்பு

சென்னை, பிப். 19—

ஓராசிரியர் பள்ளிகளை ஆரம்பிக்கும் திட்டத்தை உடனடியாகக் கூடிய சீக்கிரத்திலேயே நிறைவேற்றிவிட வேண்டுமென்றும், இவ்வேலை, எவ்விதத்திலும் இப்போதைய நிதி ஆண்டு (மார்ச் இறுதி) முடிவடைவதற்குள் நிறைவேற்றப்பட்டாகவேண்டுமென்றும், பின்தங்கிக் கிடப்பதாகக் கூறப்படும் மாவட்டக் கழகங்களின் தலைவர்களை சர்க்கார் கேட்டுக் கொண்டுள்ளது.

கழகக் கூட்டங்கள்

★

பட்டிவீரன்பட்டி
பாண்டியனார் மைதானத்தில்
22—2—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: சையது இப்ராகிம்
பேசுவோர்:
எஸ். முத்து
எம். எஸ். இராமசாமி

★

சல்லிப்பட்டி (உடுமலை வட்டம்)
தி. மு. கழக ஆண்டு விழா
23—2—55 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
சி. என். அண்ணாதுரை
ஈ. வெ. கி. சம்பத்
அ. பொன்னம்பலனார்

நமது வெற்றி......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற முடிந்தது; நாம், நமது தனி நாடு கோரிக்கையில் இன்னும் வெற்றி பெருமல் இருப்பது ஏன் என்பதை தக்க காரணங்களுடன் விளக்கினார்.

"எல்லா முகம்மதியர்களும், ஜின்னு பாகிஸ்தான் கேட்ட போது, 'நம் இனத்தலைவர் கேட்கிருர்—நம் நன்மைக்காகத்தான்' என்று அவர்கள் உணர்ந்திருந்தார்கள்; ஒரே குரலாக எல்லா முஸ்லிம்களும் பாகிஸ்தான் வேண்டுமென்ருர்கள்; ஆனால், நம்மிடம், முஸ்லிம்களுக்கிருந்த இன உணர்வு இல்லை.

"ஜின்னுவுக்கு கார் இருந்தது; பெட்ரோல் மட்டும் தேவைப்பட்டது; நமக்கு காருக்கு 'டயர்' தேவைப்படுகிறது, பெட்ரோலுடன்கூட — சமுதாய ஒற்றுமை, இன ஒற்றுமை—என்னும் அந்த 'டயர்' கிடைத்துவிட்டால், போக வேண்டிய இடத்திற்கு போவதற்கான 'பெட்ரோல்' நம்மிடம் ஏற்கனவே உள்ளது.

"இன்று, நமது திராவிட சமுதாயத்திடையே பேதம் மிகுந்திருப்பதுதான் — இன ஒற்றுமை உணர்வு குன்றி இருப்பதுதான்—நமது பலவீனம்; அதனால்தான் நாம், இன்னும் நமது விடுதலைப் போரில் வெற்றி பெற முடியாதவர்களாயிருக்கிறோம்.

"நாம் இந்த சமூக உணர்வு பெற்றுவிட்டால் நமது பிரச்சினை, இங்கு மட்டும் பேசப்படும் பிரச்சினையாக இராது; நிச்சயம் உலக வல்லரசுகள் பேசக்கூடிய பிரச்சினையாக மாறிவிடும்.

"எனவேதான், நாம் நாட்டிலே நிகழ்கிற அரசியல் தடுமாற்றங்களில் ஏமாந்து விடாமல், பொறுப்புணர்வுடன் நமது சமுதாய மக்களுக்கு இன உணர்வை ஊட்ட வேண்டியவர்களாயிருக்கிறோம்."

நெசவாளருக்குக் 'காலனி'கள்?

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் வீடு கட்டும் காலனிகளை அமைப்பதற்கு உதவி அளிக்க அகில இந்திய கைத்தறிக் குழுவின் நிரந்தரக் குழு முடிவு செய்திருக்கிறதாம்.

திரு-கொச்சி சட்டசபையைக் கலைக்க பி. சோ. கட்சி போராடுமாம்!

காங்கிரஸ் மந்திரி சபை அமைக்க கம்யூனிஸ்டுகளே காரணமாம்!

பதவி இழந்தவர்களின் முதலைக்கண்ணீர்

எர்ணுகுளம், பிப். 20—

திருவாங்கூர்-கொச்சி சட்டசபையைக் கலைக்க வேண்டுமென்றும், மந்திரிசபை அமைப்பதில் காங்கிரஸ் கையாண்ட ஜனநாயகமற்ற தன்மையை எதிர்த்தும் திரு-கொச்சி சோஷலிஸ்டு கட்சி அந்த மாநில முழுமையும் கிளர்ச்சி நடத்துவது என்றும் முடிவு செய்திருக்கிறது.

இக்கிளர்ச்சியில் நேரடியாகவோ, அல்லது மேடைப் பேச்சிலோ மற்ற கட்சிகளுடன் சேருவது இல்லை என்றும் பி. சோ. கட்சி முடிவு செய்திருக்கிறது.

எர்ணகுளத்தில் கூடிய திரு-கொச்சி பி. சோ. கட்சியின் நிர்வாகக் குழு கூட்டத்தில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

காங்கிரஸ் மந்திரி சபையை ஆதரித்தமைக்காக கேசவமேனன், வயலா இடிகுலா என்ற இரு சட்டசபை உறுப்பினர்கள் கட்சியிலிருந்து தள்ளிவைக்கப்பட்டனர்.

இதுபோன்று, கட்சியின் பிரிவுகளுக்கு விரோதமாக அறிக்கைகள் விட்ட கே. வி. குரியகோஸ் என்பவரையும் நிர்வாகக் குழு தள்ளி வைத்தது.

"பட்டம் தாணு பிள்ளையின் யோசனைப்படி சட்டசபையைக் கலைக்காமல், ராஜப் பிரமுகர் காங்கிரஸ் மந்திரி சபையை அமைக்க ஒப்புக்கொண்டதற்குக் காரணம் திரு—கொச்சி கம்யூனிஸ்டுகள்தான்" என்ற கருத்து எடுத்துச் சொல்லப்பட்டது.

"நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போது கம்யூனிஸ்டு கட்சி நடுநிலைமை வகித்ததால் சட்டசபையைக் கலைக்க வேண்டுமென்ற கருத்து வலிவிழந்து விட்டது," என்றும் கூட்டத்தில் கருதப்பட்டதாம்.

பதவியில் நீடிப்பாரா?

புதுடில்லி, பிப். 21—

மத்திய சர்க்கார் தொழிலமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் இராஜிநாமாவை பிரதமர் நேரு ஏற்க மறுத்துவிட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது.

சுமார் 70 நிமிட நேரம் நடைபெற்ற டி. டி. கே. — நேரு பேச்சு வார்த்தைகளுக்குப் பின்னர், டி. டி. கே. நேற்று சென்னை வந்துள்ளார்.

தங்களிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் மிகப் பயனுள்ளதாக இருந்ததென்றும், ஒருவருக்கொருவர் கொண்டிருந்த தப்பபிப்பிராயங்களைப் போக்கிக் கொள்ள உதவியாக இருந்ததென்றும், இங்கு டி. டி. கே. கூறியிருக்

இதைத் தவிர, தமது இராஜிநாமா பற்றி நேருவுடன் தாம் நடத்திய பேச்சு வார்த்தைகள் பற்றி அவர் ஏதும் கூறவில்லை. தாம் மீண்டும் பதவியில் நீடித்திருப்பது சில நிலைமைகளைப் பொறுத்திருக்கிறது என்றும், அது, பிரதமர் நேரு செய்யும் முடிவைப் பொறுத்துள்ளதென்றும் அவர் கூறினார்.

டி. டி. கே. தமது இராஜிநாமா கடிதத்தில், மந்திரி சபையை மாற்றி அமைக்கவேண்டுமென்ற பிரச்சினையைக் கிளப்பியுள்ளாராம். இந்த விஷயம் எப்படியும் தெளிவுபட்டாக வேண்டியிருப்பதாகக் கூறப்படுகிறது.

விலக்களிக்கக் கோரிக்கை

சென்னை, பிப். 20—

'கெட்டுவிடக் கூடிய பொருளான' வெற்றிலைக்கு, விற்பனை வரியினின்றும் விலக்களிக்க வேண்டுமென்று, இங்கு செயன்ட் மேரி மண்டபத்தில் நடைபெற்ற வெற்றிலை வியாபாரிகளின் முதலாவது மாநாட்டில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

ஒரு பள்ளி! ஒரு கிணறு!

சென்னை, பிப். 20—

1957-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இறுதிக்குள் சென்னைமாநிலத்திலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பள்ளிக்கூடமும், ஒரு கிணறும் ஏற்படுத்த சர்க்கார் தீர்மானித்துள்ளனர் என்று, சென்னை, வண்ணை தியாகராயர் கல்லூரியில் நடைபெற்ற சென்னை மாணவர் சேவா சங்கத்தின் 5-வது ஆண்டு மாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் அமைச்சர் பரமேசுவரன் தெரிவித்திருக்கிறார்.

9-பேர் கைது; 200-பேர் மீது வழக்கு பதிவு

திருவனந்தபுரம், பிப். 21—

கடந்த 13-ந் தேதியன்று இங்கு நடைபெற்ற காங்கிரஸ் கட்சி பொதுக் கூட்டமொன்றில் நடைபெற்ற கலவரம் சம்பந்தமாக போலீசார் நகர பி. சோ. கட்சிக் காரியதரிசி பி. நீலகண்டன் உட்பட 9 பேரைக் கைது செய்துள்ளனராம். இக்கலவரத்தையொட்டி 200 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குவெட்டாவில் பூமியதிர்ச்சி

கராச்சி, பிப். 20—

அண்மையில் பூமியதிர்ச்சியினால் சேதமடைந்த குவெட்டாவில் இப்போது மீண்டும் சாதாரண நிலை நிலவி வருவதாகக் கூறப்படுகிறது. மக்கள் வழக்கமாக தங்கள் தங்கள் நடவடிக்கைகளைக் கவனிக்க ஆரம்பித்துவிட்டனர். இப்பூமியதிர்ச்சியினால் மொத்தம் 7 பேர் மாண்டனர் என்று அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

குவெட்டாவைச் சுற்றியுள்ள பிரதேசத்திலுள்ள பல ஊர்களிலும் பூமியதிர்ச்சிகள் ஏற்பட்டன. இப்பிரதேசத்தின் மக்கள் தொகை மொத்தம் 6,22,000. பூமியதிர்ச்சியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சர்க்கார் மருத்துவ வசதிகளை அனுப்பியுள்ளது.

ஆங்கிலமிருந்த...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கில மொழியில் பயிற்றுவிக்கப்படுகிற கல்லூரிக்கு வந்ததும், பெரும் திக்குமுக்காடுகிருர்கள் என்றும், தமிழ் மொழியைப் பயிற்சி மொழியாகக் கொள்ளப்படுவதால், உலக மொழியான ஆங்கிலத்தைப் புறக்கணித்துவிடக் கூடாது என்றும், பயிற்சி மொழியாகக் கல்லூரிகளில் தமிழ் கொள்ளப்படுவதால், மாணவர்களின் கல்வித்தரம் குறைந்துவிடாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என் அண்ணாதுரை, எம்.ஏ.